**செய்தி வெளியீடு எண்: 260** **நாள் : 03.06.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய்த் துறையின் சார்பில் தஞ்சாவூரில் 30 கோடியே 46 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும் 80 கோடியே 77 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக கட்டடம், வருவாய், நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

கிராம நிர்வாகம் முதல் மாவட்ட நிர்வாகம் வரையான கள நிர்வாகப் பணிகளையும் நில நிர்வாகப் பணிகளையும் செயல்படுத்தி வருவதோடு பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் மிக முக்கிய துறையாக விளங்கும் வருவாய்த் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், தஞ்சாவூரில் 2,07,000 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 219 அறைகள், 4 கூட்ட அரங்குகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 30 கோடியே 46 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், கடலூரில் 24 கோடியே 41 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகக் கட்டடம்;

தாம்பரத்தில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்; தூத்துக்குடியில் 42 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு; ஸ்ரீரங்கத்தில் 2 கோடியே 15 லட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

திருப்போரூர், உடையார்பாளையம், குறிஞ்சிப்பாடி, பழனி, மதுராந்தகம், கடலூர், திருமங்கலம், குத்தாலம், கொல்லிமலை, ஓமலூர், சிவகங்கை, திருபுவனம், திருவிடைமருதூர், காங்கேயம், ஆலத்தூர் ஆகிய இடங்களில் 31 கோடியே 73 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்;

அந்தியூர் மற்றும் சின்னசேலம் ஆகிய இடங்களில் 4 கோடியே 25 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள்;

பெரம்பலூர் மாவட்டம் – வெண்கலம்; மதுரை மாவட்டம் – ராஜாகூர், குலமங்கலம், அவனியாபுரம், தணிச்சியம் மற்றும் சேடப்பட்டி; கரூர் மாவட்டம் – குளித்தலை ஆகிய இடங்களில் 92 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 குடியிருப்புகளுடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடங்கள்;

நீலகிரி, விருதுநகர், மதுரை, ஈரோடு, திருவள்ளூர், சேலம், கரூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 4 கோடியே 60 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 65 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பதிவறை கட்டடம்;

தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையின் குறுவட்ட அளவர்களுக்கு 10 கோடியே 16 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 80 குடியிருப்புகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 111 கோடியே 23 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகக் கட்டடங்கள், வருவாய்த் துறை, நில அளவை

மற்றும் நிலவரித் திட்டத் துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், நீலகிரி மாவட்டம் – உதகமண்டலத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சிவகங்கை மாவட்டம் – காளையார்கோயில், திருவண்ணாமலை மாவட்டம் – வெம்பாக்கம் மற்றும் சேத்துப்பட்டு, சேலம் மாவட்டம் – பெத்தநாயக்கன்பாளையம், கடலூர் மாவட்டம் – புவனகிரி, காஞ்சிபுரம் மாவட்டம் – வாலாஜாபாத், விழுப்புரம் மாவட்டம் – மரக்காணம், திருநெல்வேலி மாவட்டம் – கடையநல்லூர், நாமக்கல் மாவட்டம் – சேந்தமங்கலம் ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்ட 9 புதிய வருவாய் வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), வருவாய்த் துறைச் செயலாளர் திரு இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு பிரதீப் யாதவ், இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் திருமதி இரா. வாசுகி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 3.6.2015**